[2007 ஏப்ரல் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

5—

இட ஒதுக்கீடு

***10718—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்குப் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள அரசாணையின்படி, சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளான மகன், மகள், இவர்களுக்குப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இப்போது சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளாக இருக்கிற மகன், மகள்களுக்குப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்கள் எல்லோருமே வயதானவர்கள். இப்போது மகன்கள், மகள்கள் என்று இருக்கக்கூடிய நிலை எல்லாம் கொஞ்சம் கழிந்து போய், பேரன்கள், பேத்திகள் என்று வரக்கூடிய நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். காரணம், நாடு சுதந்திரம் அடைந்து 50 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆகவே, அவர்களுக்கு உயர் கல்வி பயிலும் மகனோ, மகளோ இருப்பதற்கான சாத்தியக்கூறு மிகவும் குறைவு. ஆகவே, பேரன், பேத்திகளுக்கு இந்தச் சலுகை சென்றடையக்கூடிய வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளிலே சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளுக்கு, அதாவது பேரன், பேத்திகளுக்கு இட

2007 ஏப்ரல் 2]

ஒதுக்கீடு வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–2003 வரையில் பேரன், பேத்திகளுக்கும் வழங்கலாம் என்றுதான் அரசாணை இடப்பட்டிருந்தது. ஆனால், 1–11–2002–ல் 5 நீதிபதிகள்கொண்ட உயர் நீதிமன்ற பெஞ்ச் அதற்கு ஒரு தடை உத்தரவை வழங்கி, மகன், மகள் ஆகியோருக்கு மட்டும்தான் வழங்க வேண்டும் என்ற உத்தரவினைப் பிறப்பித்திருக்கிறது. அதற்கு எதிர்ப்பாகவும், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் அரசுத் தரப்பிலே முறையிடப்பட்டிருக்கிறது. வழக்கு நிலுவையில் இருக்கிறது. வழக்கு முடிந்த பிறகுதான் பேரன், பேத்திகளுக்கும் இதைக் கொடுக்க முடியுமா என்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார், யாருக்கு, எப்படி இட ஒதுக்கீடு என்று அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு இதை வழங்க வேண்டுமென்று கொள்கை முடிவெடுத்து, அதைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பிரதிநிதிகள் உள்ள இந்த அவைக்கும், அதேபோல, மக்கள் பிரதிநிதிகளை வைத்து உருவாகியிருக்கிற மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சரவைக்கும்தான் உண்டு. அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் இப்படிப்பட்ட அரசாணைகளை அல்லது சட்டங்களை நாம் இயற்றுகிறோம். ஆனால், Judicial activism அதிகமாகச் சென்று, இப்போது நீதிபதிகள் தங்களுடைய எல்லையைக் கடந்து இப்படியொரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டு, பேரன், பேத்திகளுக்கு வரக்கூடிய வாய்ப்பை 2002 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்திவிட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது. அந்த வழக்கு நடப்பது நடக்கட்டும். அரசு உடனடியாக இங்கே மீண்டும் அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாவது, பேரன், பேத்திகள், கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேத்திகளுக்குக்கூட இந்தச் சலுகை சென்றடையக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தையே நிறுத்தி வைத்திருக்கிற காலக்கட்டம். உங்களுடைய

கருத்துகளைப் பரிசீலித்து, என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதற்கு எப்போதும் கலைஞருடைய அரசு தயங்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் பற்றிய கேள்வி. குறிப்பாக, இட ஒதுக்கீட்டுக்குத் தமிழகம்தான் வழிகாட்டியாக இருந்திருக்கிறது என்பதற்குத் தற்போது ஏற்பட்டிருக்கிற 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டுச் சோதனைக்கு நம்முடைய தமிழகம் மீண்டும் வழிகாட்டியிருக்கிறது. ஆகவே, இட ஒதுக்கீட்டிற்கே வழிகாட்டியிருக்கிற நம்முடைய தமிழ் மண், சமூக நீதிக்காகப் போராடிச் சிறை சென்றவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு—இந்த இட ஒதுக்கீட்டுப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்கு இட ஒதுக்கீட்டில் சிறப்பு இட ஒதுக்கீடாக வாய்ப்புகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, 2002–2003–க்கு முன்பாக தமிழுக்காக உயிர் கொடுத்தவர்களுடைய வாரிசுகளுக்கெல்லாம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், 1–11–2002 அன்று அளித்த தீர்ப்பின்படி, நான்கே நான்கு வகையினருக்குத்தான் சிறப்பு ஒதுக்கீடு செய்ய முடியும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. உடல் ஊனமுற்றோர், மிகச் சிறந்த விளையாட்டு வீரர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் பிள்ளைகள், அதாவது மகன், மகள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களின் பிள்ளைகள் ஆகிய இந்த 4 பிரிவினர்களுக்கு மட்டுமே சிறப்புச் சலுகை வழங்கப்பட வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவு கொடுத்திருக்கிறது. அதை எதிர்த்துத்தான் அப்போதே, 2003–லேயே வழக்குத் தொடரப்பட்டு, இன்னும் வழக்கு நிலுவையிலேயே இருக்கிறது. அதை விரைவுபடுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு

2007 ஏப்ரல், 2]

நன்றி. ஆனால், அதனுடன், எல்லைப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கும், மொழிப் போர் தியாகிகளின் வாரிசுகளுக்கும் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கை எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ முடித்து, அதன் பிறகு முதல்வர் அவர்கள் எடுக்கிற முடிவின்படி யார், யாருக்குக் கொடுக்கலாம் என்பதையும் இந்த அரசு கவனத்தில்கொண்டு ஏற்பாடுகள் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

பணிமனை

***1602—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் பொன்மேனி பணிமனையைச் சீர்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை, பொன்மேனி கிளைப் பணிமனையில் வண்டிகள் நிறுத்தும் தளத்தின் மேடு, பள்ளங்கள் ஜே.சி.பி. கொண்டு மட்டப்படுத்தப்பட்டுள்ளன; மற்றும் கட்டடப் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், சிமெண்ட் தளம் அமைக்கும் பணி பகுதி, பகுதியாக மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்தியாவசியத் தேவைகள் அவ்வப்போது செய்து வரப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி